## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் அதிகாரசபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது அதிகாரசபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பந்திக்கமைய தேவையேற்படும் போது அல்லது அங்கீகாரம் வழங்கப்பட்ட சந்தர்ப்பமொன்றை தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் செய்யப்படக்கூடாத போதிலும், கணக்கு வைத்தலிலான குறைபாடுகள் காரணமாக நீண்டகாலமாக காணப்பட்ட செயற்திட்ட நிதியங்கள் நான்கின் ரூபா 1,657,000 தொகையான வரவு மீதிகள் மற்றும் நிதியங்கள் ஆறின் ரூபா 3,258,669 கூட்டுத்தொகையான செலவின மீதிகள் தீர்க்கப்படாது ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு ரூபா 1,601,669 தேறிய செலவு மீதியான நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் வரவு மற்றும் செலவின மீதிகள் தனித்தனியாக ஐந்தொகையில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மற்றும் மீதிகளின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்திக்கமைய சொத்துக்கள் பெறுமானத்தேய்விடல் ஆரம்பிப்பது அது பாவனைக்கு உகந்த நிலையை அடைந்த பின்னர் ஆகும். எவ்வாறெனினும், மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,358,003 பெறுமதியான சொத்துக்களுக்காக முழு வருடத்திற்கும் பெறுமானத்தேய்விடப்பட்டமையால் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 701,926 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அதிகாரசபையை தொடர்ச்சியான நடாத்திச் செல்லல் கொள்கையொன்றென்பது. | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய சொத்துக்களின் பெறுமானத்தேய்வு செலவினத்தை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 55 ஆம் பந்திக்கு முரணாக 2 மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டமையினால் ஏற்பட்ட மிகையானது 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் ரூபா 965,000 படியாக வருடாந்தம் நிதிச் செயலாற்றல் அறிக்கையில் பிற்போடப்பட்ட வருமானமாக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | வருடாந்தம் பெறுமானத் தேய்விடப்படும் தொகைக்கு சமமான பெறுமதியொன்று மீள்மதிப்பீட்டு ஒதுக்கீட்டு கணக்குக்கு வரவு வைக்கப்பட்டு வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதாகவும் அவ்வாறல்லாத போது இந்த பெறுமதி ஒதுக்கமொன்றாக புத்தகங்களில் தொடர்ந்தும் முன்கொண்டு வரப்படுவதாக. | அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

## 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றுக்கிடையே இடம்பெறும் உள்ளக கொடுக்கல் வாங்கல்கள் உரிய முறையில் பதிவு செய்யப்படாமையால் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபைக்கு நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டிய மீதியில் மற்றும் அதிகாரசபையினால் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதியில் முறையே ரூபா 842,874 தொகை மற்றும் ரூபா 3,236,982 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | உள்ளக கொடுக்கல் வாங்கல்கள் உரிய முறையில் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன், பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளுக்கிடையேயான வேறுபாடுகளை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது இணக்கம் செய்யப்பட்டு திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 1.5.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு செலுத்த வேண்டிய மீதியாக ரூபா 6,739,327 தொகை மற்றும் பெற வேண்டிய மீதியாக ரூபா 7,582,201 தொகை 4 வருடங்களுக்க மேற்பட்ட | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு உள்ள போதிலும், அந்த மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | செயற்பாட்டு நிலையில் இல்லாத யுனிசெப் மற்றும் சேவ் த சில்ரன்ஸ் ஆகிய நிதியங்களிலிருந்து முறையே 2006 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் பெற் வேண்டியதாக முறையே ரூபா 235,379 தொகை மற்றும் ரூபா 256,510 தொகை நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகளின் அறவீடு நிச்சயமற்றதாக காணப்பட்டது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ஐக்கிய நாடுகளனி அபிவிருத்தி நிகழ்சசித்திட்டங்களில் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டியதாக பதிவு செய்யப்பட்டுள்ள ரூபா 804,851 பெறுமதி இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,438,888 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 18,498,673 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 11,059,785 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு திறைசேரி மானியங்கள் ரூபா 11,223,189 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகாரசபையின் 1929 தொலைபேசி இலக்கத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் செயற்படுவதற்காக பொருத்தமான பொறிமுறையொன்றினை தயாரித்தல் மற்றும் உரிய நடைமுறையை மேம்படுத்துவதற்கு பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதறகாக ஆலோசனையாளருக்கு 2016/2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 900,000 செலுத்தப்பட்டிருந்தது. அந்த பரிந்துரைகள் வழங்கப்பட்டு இரண்டு வருட காலம் கடந்திருந்த போதிலும், அதில் உள்ளடங்கியுள்ள பரிந்துரைகள் மற்றும் நடைமுறைகளை பின்பற்றுதல் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 1929 மென்பொருட்களுடன் தீர்ப்பனவு செய்யப்படாமையால் இந்த தரவுக் கட்டமைப்பினை மீள அபிவிருத்தி செய்ய சேர்ந்துள்ளதாக. | உரிய பரிந்துரைகள் மற்றும் நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது பொறிமுறையை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | அதிகாரசபையில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் அந்தந்த பதவிகளில் நிறுத்தி வைப்பதற்காக ஆட்சேட்ப்பு நடைமுறையை திருத்துதல், செயற்திறன் காண் தடைப்பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் சம்பள படிமுறைகளை திருத்தியமைத்தல் போன்ற பணிகள் நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டிராமையால் ஊழியர் புரழ்வு அதிகரித்தமையும் வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளாமையால் அதிகாரசபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதிலான தாமதம் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளல் மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை தக்கவைப்பதற்காக முறையாக முகாமைத்துவ நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலகத்திற்கும் இணைப்பு செய்யப்பட்டுள்ள பிரதேச மற்றும் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தொடர்பில் நீண்ட காலமாக உரிய மேற்பார்வையொன்று மேற்கொள்ளாமையால் அதிகாரசபைக்கு முறைப்பாடு செய்யப்படும் பாலியல் குற்றங்கள் மற்றும் துஸ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் கொடுமைகள் போன்ற முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதுடன், அந்த முறைப்பாடுகளை விசாரித்து தீர்ப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து உத்தியோகத்தர்களினதும் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக முறையான வேலைத்திட்டடொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3.3 ஏனைய அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் (நிகழ்ச்சித்திட்டம்) பதவியினை வகித்த பெண் உத்தியோகத்தர் 8 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சம்பளம் மற்றும் படிகளை மீள்நிரப்பும் அடிப்படையில் மற்றுமொரு அமைச்சிற்கு சேவையாற்றுவதற்காக விடுவிக்கப்பட்டிருந்தார். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பெண் உத்தியோகத்தரை வரவழைப்பதற்கு அல்லது அந்த பதவிக்கு மற்றுமொரு உத்தியோகத்தரின் சேவையினை பெற்றுக்கொள்வதறகேனும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுவினை தாபிப்பதற்காக மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கடந்த 8 வருட காலப்பகுதியினுள் அதிகாரசபையினால் ரூபா 29,058,645 செலவிடப்பட்டிருந்தது. நாட்டின் 10,194 எண்ணிக்கையான மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கையில் மீளாய்வாண்டின் இறுதியளவில் சிறுவர் பாதுகாப்ப குழுக்கள் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியதன் பின்னர் பின்தொடர்தலொன்று மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | தாபிக்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 3,615 ஆக இருந்ததுடன், அது 35 சதவீதம் மாத்திரம் ஆகும். அவற்றுள் செயற்படு நிலையிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 2,392 ஆக இருந்ததுடன், அது மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கையில் 23 சதவீதம் மாத்திரம் ஆகும். | | |
| (ஆ) | அவசர விபத்து நிலமைகளின் போது பின்பற்றப்பட வேண்டிய சிறுவர் பாதுகாப்பிற்கான வழிகாட்டிகள், சிறுவர் இல்லங்களுக்கான பாடநெறியின் பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டி கையேடு மற்றும் அதன் 500 பிரதிகளை அச்சிடுவதற்காக மற்றும் பெற்றோர்களுக்கான நேர்மறையான ஒழுக்கநெறிகள் தொடர்பான வழிகாட்டியினை அச்சிடுவதற்காக ரூபா 1,800,000 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கட்டளைகளை ஒப்படைப்பதற்று நடவடிக்கை எடுத்ததுடன், 2019 ஆம் ஆண்டினுள் நிறைவடைகின்றமை. | செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இணையத்தள பாதுகாப்பு தொடர்பில் உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 9 மற்றும் இணையத்தினூடாக இடம்பெறும் துஸ்பிரயோக சம்பவங்கள் 100 தொடர்பில் இணையத்தள புலன் விசாரணை இலகுபடுத்தல் மற்றும் பராமரிப்பு வசதிகளை பேணிச்செல்வதற்காக ரூபா 780,000 தொகையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ரூபா 63,000 தொகை செலவிடப்பட்டு 24 சம்பவங்கள் தொடர்பில் மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டத்திற்கமைய இருத்தல் வேண்டும். |
| (ஈ) | அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட சமூக பாதுகாப்பு செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 9 பணிகள் உள்ளடக்கப்பட்டு ரூபா 20 மில்லியன் நிதியேற்பாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் 7 பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டத்தினை தயாரிக்கும் போது அந்த வருடத்தினுள்ளேயே நடைமுறைப்படுத்துவதற்கு இயலக்கூடிய நிகழச்சித்திட்டங்கள் மாத்திரம் உள்ளடக்குதல் தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டியமை. |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2009 யூன் 09 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் இலக்கம் டீஎம்ஏ/2009/(1) இன் 3 ஆம் பந்திக்கமைய உரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக போதியளவு பதவியணியொன்று உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு இணைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | போதியளவான பதவியணியை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடும் போது 14 சதவீதம் முதல் 771 சதவீதம் வரையான வீச்சில் விலகள்கள் அவதானிக்கப்பட்டன. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டியமை. |

**4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய இலக்கம் என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 “நிகழ்ச்சி நிரல்” இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்த | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கடிதங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்குரிய அடைவுகளும் இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காணுவதற்காக அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.